## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - மூன்று - ________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
|---|---|
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. 'ஓடைக்குள்ளே' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) ஓடைக்கு + உள்ளே ஆ) ஓடை + உள்ளே இ) ஓடை + க்குஉள்ளே
2. "மரங்களுடன் இருந்தால் தப்பித்திருக்கலாம்" என்று கூறியது ________
   அ) சிங்கம் ஆ) புலி இ) மான்
3. 'வெப்பம் + ஆக' - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________
   அ) வெப்பம்மாக ஆ) வெப்மாக இ) வெப்பமாக
4. வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுவது ________
   அ) கருணை ஆ) பணம் இ) கல்வி
5. 'உரியதாயிற்று' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) உரியது + ஆயிற்று ஆ) உரிய + ஆயிற்று இ) உரி + ஆயிற்று
6. கல்வி ________ போன்றது.
   அ) கண் ஆ) பொன் இ) செல்வம்
7. சிபி சக்கரவர்த்தியின் மடியில் அமர்ந்த பறவை ________
   அ) பருந்து ஆ) கிளி இ) புறா
8. 'என்பிலதனை' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) என்பு + லதனை ஆ) என்பி + லதனை இ) என்பில் + அதனை
9. 'பணிவுடையன்' - இச்சொல்லைப் பிரித்து எழுதினால் கிடைப்பது ________
   அ) பணிவு + உடையன் ஆ) பணிவு + டையன் இ) பணி + வுடையன்
10. 'துயர் + உற்றனர்' - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________
    அ) துயர் உற்றனர் ஆ) துயருற்றனர் இ) துயறுற்றனர்

**ஆ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** 4 × 1 = 4

1. துன்பம் 2. மகிழ்ச்சி 3. மேலே 4. வேகமாக

**இ) பொருள் தருக.** 4 × 1 = 4

1. விவாதம் 2. ஞாலம் 3. என்பு 4. நனைந்த

**II. அ) பின்வரும் வினாக்களுள் எது சரி ☑, எது தவறு ☒ எனக் குறிப்பிடுக.** 5 × 1 = 5

1. உப்பு மூட்டை நீரில் கரையவில்லை. ☐
2. விலங்குகள் சென்ற இடம் பாலைவனம் ☐
3. கண்ணதாசனுக்கு உதவி செய்தது டாக்டர் சதாசிவம். ☐
4. நீதி தேவதையாக உருமாறியது பருந்து. ☐
5. விடுதி முதலாளியின் பெயர் செல்லையா. ☐

**ஆ) பொருத்துக.** 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| 1. கழுதை | - | பணிவு |
| 2. கண்ணதாசன் | - | மங்கள விலாஸ் |
| 3. மகேந்திரன் | - | கல்வி |
| 4. அணிகலன் | - | உப்பு மூட்டை |

**III. அ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுக.** 6 × 2 = 12


1. காட்டில் என்ன போட்டி அறிவிக்கப்பட்டது.
2. கண்ணதாசனின் உள்ளத்தில் தோன்றிய எண்ணம் என்ன?
3. திருக்குறளை இயற்றியவர் யார்?
4. காட்டில் விவாதம் யார் யாருக்கிடையே நடந்தது?
5. எது வாழ்வில் உயர்வைத் தரும்?
6. கண்ணதாசன் வாழ்வில் உயரக் காரணமாக இருந்தது எது?
7. அறம் யாரை வாட்டும்?


**ஆ) பின்வரும் குறட்பாக்களை பிழையின்றி எழுதுக.** 2 × 2 = 4

1. ‘தக்கார்’, ‘கேடில்’ எனத் தொடங்கும் குறட்பாக்களை அடிமாறாமல் பிழையின்றி எழுதுக.

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** 7

1. குளம், நிலா, சூரியன், விண்மீன், வானம் (தவறான சொல்லை வட்டமிடுக.)
2. கண்ணதாசனின் பிஞ்சு உள்ளத்தில் ஒரு ________________ தோன்றியது. (எண்ணம் / என்னம்)
3. பணிவுடையன் ________________ ஆதல் ஒருவற்கு ________________ அல்ல மற்றுப்பிற. (கோடிட்ட இடத்தை நிரப்புக.)
4. கூட்டு சேர்ந்து கூட்டைக் கட்டும். மாட்டுவோரை மடக்கித் தாக்கும். அவன் யார்?
5. படத்தைப் பார்த்து பெயரை எழுதுக.

அ) 

ஆ) 

இ) 